**செய்தி வெளியீடு எண் : 417** **நாள்: 16.03.2022**

**<u>14.03.2022 அன்று தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், ஆவின் இல்லம், நந்தனத்தில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் நடவடிக்கை விவரங்கள்.</u>**

1)14.03.2022 மாலை 3.00 மணிக்கு ஆவின் இல்லத்தில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் பால்வளத்துறைக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் அவர்கள் வரவேற்புரையும், ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்கள் முன்னிலை உரையும் வழங்கினார் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, தலைமைச் செயலகம் அவர்கள் சிறப்புரை ஆற்றி ஆய்வு கூட்டத்தை துவக்கி வைத்தார்.

2)ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பொது மேலாளர்களும், அனைத்து மாவட்ட துணைப் பதிவாளர்கள் (பால்வளம்), பால்வளத்துறை மற்றும் இணையம் சார்ந்த உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

- முன்னிலை உரையாற்றிய ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை அவர்கள் தமிழகத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை 1 கோடிக்கு அதிகமாக உள்ளதாகவும், இதில் 16 இலட்சம் அளவிலான கால்நடைகள் மட்டுமே ஆவின் உறுப்பினர்கள் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், இந்த எண்ணிக்கையினை அதிகரிக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பால்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் 20 இலட்சம் எண்ணிக்கையில் உறுப்பினர்கள் உள்ளதாகவும் இதில் பால் ஊற்றுப்பவர்களின் எண்ணிக்கை 4 இலட்சம் உறுப்பினர்கள் மட்டுமே உள்ளதாகவும் கூறினார்கள். **மேலும், சங்கங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கையினை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்கள்**
- அடுத்து சிறப்புரை ஆற்றிய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் மாவட்ட வாரியாக தான் மேற்கொண்ட முகாம்களின் அடிப்படையில் பால்வளத்துறையின் வளர்ச்சியினை மேம்படுத்த பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்கள். மேலும் மாண்புமிக பால்வளத்துறை அமைச்சர் அவர்களின் எழுத்து மூலமான

பரிந்துரையின் அடிப்படையில் இத்துறையில் பால்வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் என தனித்தனியே இரண்டு IAS அலுவலர்களை நியமனம் செய்தமைக்கு தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

**அதை தொடர்ந்து ஆய்வுக் கூட்டத்தை தொடர்ந்து நடத்திய மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவுரைகளை வழங்கினார்கள்**

- தற்போதைய அரசு பொறுப்பேற்றவுடன் அனைத்து வகையான ஆவின் பால் விற்பனை விலையை ரூ.3.00 குறைத்து ஆணையிட்டதன் அடிப்படையில் பால் விற்பனை நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் அதிகரித்துள்ளதாகவும், இந்நிலை இப்படியே தொடர்வதாகவும் மேன்மேலும் பால் விற்பனையில் முன்னேற்றம் ஏதும் இல்லை என்றும் **பால் விற்பனையினை அதிகரிக்க தேவையான நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள்**
- தனியார் பால் விற்பனை விலை அதிகரித்துள்ளதால் ஆவின் பால் விற்பனை அளவை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.
- தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் பல்வேறு தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் கொள்முதல் மிகவும் குறைவாக இருப்பதை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வின் போது சுட்டிக் காட்டினார்கள். அண்டை மாநிலமான கேரளாவில் பால் கொள்முதல் விலை அதிகமாக இருப்பதனால், கேரளா மாநிலத்தை ஒட்டியுள்ள தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பாலை வழங்காமல் கேரளாவிற்கு விற்பனை செய்கிறார்கள் என்றும் பால்வளத்துறை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களுக்கு வழங்கும் சலுகைகளை எடுத்துக் கூறி இவ்வாறு அண்டை மாநிலத்திற்கு பால் விற்பனை செய்வதை தடுத்து, தமிழ்நாட்டின் பால் கொள்முதலை உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தொடர்புடைய பொது மேலாளர்களும், துணைப் பதிவாளர்(பால்வளம்)களும் பதில் சமர்ப்பித்தனர்.
- சென்ற வருட மார்ச் 2021 மற்றும் இவ்வருட மார்ச் 2022 பால் கொள்முதலை ஒப்பீடு செய்யும் போது கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தினசரி 3.409 லிட்டர் குறைவாக பால் கொள்முதல் செய்துள்ளது, இது சென்ற ஆண்டை விட 49% குறைவாகும். அதேபோல, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி

மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் முறையே 28% மற்றும் 21% குறைவாக பால் கொள்முதல் செய்துள்ளன.

- மேலும், மார்ச் மாத 2022 பால் கொள்முதல் இலக்குடன். மார்ச் மாத சராசரி பால் கொள்முதலை (10.03.2022 வரை) ஒப்பிடும் போது கன்னியாகுமரி ஒன்றியம் 66%, திருநெல்வேலி 58%, கோயம்புத்தூர் 57%, காஞ்சிபுரம்–திருவள்ளூர் 47%,. தூத்துக்குடி 46% சிவகங்கை 44% ஆகிய ஒன்றியங்களில் குறைவாக பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

- **மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சங்க அளவிலான 30.09.2021 அன்றைய தேதிய பால் கொள்முதல் அளவை 10.03.2022 அன்றைய தேதிய பால் கொள்முதலுடன் ஒப்பிட்டு குறைவான பால் கொள்முதலுக்கான காரணங்களை பொது மேலாளர்கள் மற்றும் துணை பதிவாளர்கள் (பால்வளம்) ஆகியோரிடம் விரிவான ஆய்வு நடத்தினார்கள் 30 சதவித்திற்கும் மேல் பால் உற்பத்தி குறைந்த சங்கங்கள் மீது தொடரப்பட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரத்தை 10 நாட்களுக்குள் தெரிவிக்க அறிவுறுத்தினார்கள்.**
- **கொரோனா காலகட்டங்களில் மாவட்ட ஒன்றியங்கள் கூடுதலாக மேற்கொண்ட கொள்முதல் பால், தற்போது குறைந்து விட்டது, அதற்கான காரணங்களை விளக்குமாறு பொது மேலாளர்கள் மற்றும் துணை பதிவாளர்கள் (பால்வளம்) அவர்களை கேட்டறிந்தார்.**

- **ஒப்பந்தப்புள்ளி (Tender) நடவடிக்கைகளை காலதாமதமின்றி முடிக்க விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.**
- **அரசு பொது மருத்துவமனைகள், அரசு கல்லூரிகள் போன்ற நிறுவனங்களுக்கு பால் விற்பனை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.**
- **சங்கங்களில் இருந்து தனியாருக்கு பால் விற்பனை செய்யப்பட்டால் உடனடியாக நிறுத்தம் செய்யப்பட வேண்டும்**.அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மேலும் தரமான பாலினை மட்டுமே உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்ய அறிவுறுத்தனார்கள்.
- **தற்போது சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் ஆகிய மூன்று ஒன்றியங்களில் மட்டுமே பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு பால் வழங்கும் இடத்திலேயே ஒப்புகைச் சீட்டு (Spot Acknowledgement) வழங்கப்பட்டு வருகிறது. இதனை (100%ஒப்புகைச் சீட்டு (Spot Acknowledgement))மீதமுள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலும் நடைமுறைபடுத்த தேவையான**

**அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ஒப்புகை சீட்டு வழங்கப்பட வேண்டும்என்று அறிவுறுத்தினார்கள்.**

- இனிவரும் காலங்களில் மாவட்ட வாரியாக உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத் தலைவர் மற்றும் செயலர் மற்றும் சங்க பிரதிநிதிகளுடன் மாவட்ட துணை பதிவாளர் (பால்வளம்) மற்றும் ஒன்றிய பொது மேலாளர் ஆகியோருடன் துறை அதிகாரிகள் மற்றும் மாண்புமிகு **பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் ஆய்வுக் கூட்டம் நடத்தி சங்க உறுப்பினர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்**
- மின்னணு பணப்பரிமாற்றம் முறையில் மட்டுமே உற்பத்தியாளர்களுக்கு பணம் வழங்கப்பட வேண்டும். அனைத்து சங்கங்களிலும் பால் பரிசோதனை கண்டிப்பாக செய்யப்பட வேண்டும் பால் பரிசோதனை முறையில் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் பாலுக்கான தொகை சரியான முறையில் அரசு நிர்ணயித்த விலையில் வழங்கப்படுகிறதா? என கண்காணிக்கப்பட வேண்டும்.
- சங்க வாரியாக தனித்தனியாக பால் உற்பத்தி, கால்நடைத் தீவனம் வினியோகம், தாதுஉப்பு வினியோகம் ஆகியவற்றை நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை காலத்தே அடையும் பொருட்டு மிகவும் கவனமாகத் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- தினசரி பால் உற்பத்தியினை அந்தந்த விரிவாக்க அலுவலர்கள்/முதுநிலை ஆய்வாளர்கள்/ இதர களப் பணியாளர்கள் கண்காணித்து படிப்படியாக பால் உற்பத்தி அதிகரிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுத்து அதன் அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.
- பால் உற்பத்தி அதிகமாக/ குறைத்து அனுப்பும் சங்கங்களை ஒருங்கிணைத்து ஆய்வுக் கூட்டம் நடத்தி முன்னேற்ற அறிக்கையினை உடன் சமர்ப்பிக்க வேண்டும். இந்த மாதத்தில் படிப்படியாக பால் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தரமான கலப்படமற்ற பாலினை மட்டுமே கொள்முதல் செய்து அனுப்ப வேண்டும் என ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் மிகவும் அழுத்தத்துடனும் கண்டிப்புடனும் தெரிவித்தார்கள் . தற்போதைய சூழ்நிலையை ஒன்றிய பால் சேகரிப்பு குழுத் தலைவர்கள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் தங்களது கடமைகளை, **பொறுப்புகளை உணர்ந்து உறுப்பினர்களுக்கான சலுகைகளை உரிய முறையில் வழங்கி, சங்க செயலாளர்களுடன் களத்தில் இறங்கி ஒருங்கிணைந்து பணியாற்ற கேட்டுக் கொள்ளப்பட்டது.**

- அனைத்து மாவட்டங்களிலும் ஆவின் பால் மற்றும் பால் உப பொருட்கள் தடையில்லாமல் கிடைக்கவும், பால் விற்பனையை மேம்படுத்தவும் போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பால் விற்பனை இலக்கினை எய்திட ஆங்காங்கே முகவர்கள் நியமனம் செய்து ஆவின்பால் தங்குதடையில்லாமல் அனைத்தும் பகுதிகளிலும் கிடைக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார்கள். ஆவின் பாலகங்களை திடீர் ஆய்வுசெய்து ஆவின் பொருட்கள் மட்டுமே விற்பனை செய்வதை உறுதிப்படுத்த கேட்டுக்கொள்ளப்பட்டது.ஆவின் பாலகங்கள் மற்றும் ஆவின் முகவர்களுக்கு விற்பனை இலக்கு நிர்ணயம் செய்து கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டது. அனைவரும் ஒன்றிணைந்து பால் உற்பத்தி மற்றும் பால் விற்பனையை மேம்படுத்த வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.
- அனைத்து மாவட்ட துணை பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்களில் 2012–13 முதல் நிலுவையில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை தனி அறிக்கைகள் மீது கவனம் செலுத்தி 15 நாட்களுக்குள் நிவர்த்தி செய்ய தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ள கூடுதல் பால் ஆணையர் (பொறுப்பு) அவர்கள் கண்காணிக்கவும் இது குறித்து உரிய அறிக்கையை அடுத்த ஆய்வுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தினார்கள். நிலுவையில் உள்ள பிரிவு 81 ன் கீழ் விசாரணை (18) உரிய காலத்தில் முடித்து தொடர் நடவடிக்கை எடுத்து விவரம் சமர்ப்பிக்க அறிவுறுத்தினார்கள்.
- ஒன்றியங்களில் மாதந்தோறும் Total Solids(TS) மற்றும் சரக்கிருப்பு பரிசோதனை மேற்கொண்டு அதன் வேறுபாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு தணிக்கை குறைகளை தவிர்கக அறிவுறுத்தினார்கள்.
- நிலுவையில் உள்ள அறிவிப்புகளை துரிதமாக செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இணைய அலுவலர்கள் மற்றும் கூடுதல் பால் ஆணையர் (பொறுப்பு) அவர்களை கேட்டுக் கொண்டார்கள்.
- **மாவட்ட அளவில் துணை பதிவாளர்கள் (பால்வளம்) அவர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள், கூட்டம் நடத்துதல் மற்றும் முகாம்கள் போன்றவற்றினை நடத்தும்போது இருப்பிடம் காலநேரம் குறிப்பிடும் புகைப்படம் எடுத்து WhatsApp மூலம் அனுப்ப அறிவுறுத்தினார்கள்.**
- மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடந்த 11.03.2022 அன்று மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பால் உற்பத்தியாளர்களுக்கு 15 நாட்களுக்குள் பால் பணப் பட்டுவாடா வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்கள் எனவே, அதற்கான நடவடிக்கைகளை மாவட்ட ஒன்றிய பொது

மேலாளர்களும் மற்றும் இணைய அலுவலர்களும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்கள்.

- கடந்த 2021 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகை நாட்டிகளில் பால் உப பொருட்கள் விற்பனையில் சுமார் ரூ.82.00 கோடி அளவுக்கு விற்பனை செய்து சாதனை எய்திய விபரம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பாரட்டினை பெற்றது எனவும், இதே போன்று திட்டமிடலுடன் செயல்பட்டால் மேன்மேலும் சாதனைகளை விற்பனையில் அடையலாம் என்று மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆவின் பால் நுகர்வோரின் நலன் கருதி பால் விற்பனையில் கலப்படத்திற்கு இம்மியளவும் இடமளிக்காமல் கண்காணிக்கவும் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக நுகர்வோர்களுக்கு விற்காமல் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

**அதனை தொடர்ந்து ஆய்வுக் கூட்டத்தை தொடர்ந்து நடத்திய அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள் கீழ்கண்ட அறிவுரைகளை வழங்கினார்கள்**

- அனைத்து மாவட்ட ஒன்றியப் பொது மேலாளர்களும் மற்றும் துணை பதிவாளர் (பால்வளம்) அவர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு பால் கொள்முதல் மற்றும் விற்பனையினை அதிகரிக்கவும் இதற்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளவும் அந்தந்த மாவட்ட ஆட்சியருடன் இது குறித்து கலந்து ஆலோசித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.
- தொடர்ந்து அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளை வழங்கினார்கள். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பணியாளர்களின் நலனை கருத்தில் ஏற்று பணியாளர்களின் தகுதிகாண் பருவம் நிறைவு ஆணைகளை நிலுவையில் இல்லாமல் வழங்கிடவும், ஒழுங்கு நடவடிக்கையின் மீதான நடவடிக்கைகளை துரிதமாக முடித்து வைக்கவும், ஓய்வு பெற்ற பணியாளர்களின் ஓய்வுகால பணப்பயன்களை உடனடியாக வழங்கவும் மற்றும் பணியிலிருக்கும்போது இறந்த பணியாளரின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரி நிலுவையிலுள்ள விண்ணப்பங்களுக்கு விரைவாக பணி நியமனங்களை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தினார்கள்.
- அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் அனைத்து தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கும் மின்னனு முறையில் பால் தரத்தினை அறிவதற்கான உபகரணங்கள்

வழங்குவதற்கான சாத்திய கூறுகளை கண்டறிந்து துணை பொது மேலாளர் (பொறியியல்), இணையம் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக் கொண்டார்கள்.

- அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள், பொது மேலாளர்கள் மற்றும் துணை பதிவாளர்கள் (பால்வளம்), அனைத்து தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க செயலாளர்களின் தொலைபேசி எண். பெயர் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள். மேலும், தொடக்க பால் உற்பத்தியளார்கள் கூட்டுறவு சங்கங்களின் பால் கொள்முதலை தினந்தோறும் ஆய்வு செய்து உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள்.
- அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள், பால் உற்பத்தியாளர்கள் பால் பண பட்டுவாடாவில் பின் தங்கியுள்ள கிருஷ்ணகிரி மாவட்ட பால் உற்பத்தியாகள் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் பண பட்டுவாடா நிலுவைகளை விரைந்து வழங்கிட மேற்கொள்ள வேண்டிய நடடிவடிக்கைகள் குறித்த விரிவான ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொது மேலாளர் (நிதி), தலைமை அலுவலகம் அவர்களுக்கு உத்தரவிட்டார்கள்.
- அதே போன்று, திண்டுக்கல், தர்மபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பண பட்டுவாடாவை விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுத்தினார்கள்.
- அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள். இனிவரும் காலங்களில் துணை பதிவாளர்கள் (பால்வளம்) மற்றும் மாவட்ட ஒன்றிய பொது மேலாளார்களும், மாவட்ட ஆட்சியர் அவர்களை வாரமொருமுறை சந்தித்து, அவர்களுக்கு பால் கொள்முதல், பால்/பால் உபபொருட்கள் ஏற்படும் இடர்பாடுகள் குறித்தும் மற்றும் இதர தகவல் குறித்தும் தெரிவிக்க வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மக்கள் தொடர்பு அதிகாரியையும் சந்தித்து அவரவர் ஒன்றியங்கள் குறித்த நல்ல தகவல்களை உடனுக்குடன் தெரிவித்து அத்தகவல்கள் மக்களை சென்றடைய வேண்டும் என்று தெரிவித்தார்கள்.
- இணைய பொது மேலாளர் (நிர்வாகம்) / மாவட்ட வருவாய் அலுவலர்) அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**